## யூலை – 26 – வியாழன்

### புனிதர்கள் சுவக்கீன் அன்னம்மாள்

**விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்கு கொடுத்து வைத்திருக்கிறது'' (மத். 13:11)**

### முதல் வாசகம் : ஏரேமியா2 : 1 – 3, 7 – 8, 11 – 13

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. "நீ சென்று எருசலேம் நகரினர் அனைவரும் கேட்கும் முறையில் இவ்வாறு பறைசாற்று. ஆண்டவர் கூறுவது இதுவே. உன் இளமையின் அன்பையும் மணமகளுக்குரிய காதலையும் விதைக்கப்படாத பாலைநிலத்தில் நீ என்னை எவ்வாறு பின்பற்றினாய் என்பதையும் நான் நினைவுகூர்கிறேன்.இஸ்ரயேல் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அவரது அறுவடையின் முதற்கனியாய் இருந்தது. அதனை உண்டவர் அனைவரும் குற்றவாளிகள் ஆயினர். அவர்கள்மேல் தீமையே வந்துசேர்ந்தது, என்கிறார் ஆண்டவர்.செழிப்பான நாட்டுக்கு அதன் கனிகளையும் நலன்களையும் நுகருமாறு நான் உங்களை அழைத்து வந்தேன். நீங்களோ, அந்நாட்டிற்குள் வந்து அதனைத் தீட்டுப்படுத்தினீர்கள் எனது உரிமைச் சொத்தை நீங்கள் அருவருப்புக்குள்ளாக்கினீர்கள். குருக்கள், "ஆண்டவர் எங்கே?" என்று கேட்கவில்லை திருச்சட்டத்தைப் போதிப்போர் என்னை அறியவில்லை. ஆட்சியாளர் எனக்கு எதிராகக் கலகம் செய்தனர். இறைவாக்கினர் பாகால் பெயரால் பேசிப்பயனற்றவற்றைப் பின்பற்றினர்.தங்கள் தெய்வங்கள் தெய்வங்களே அல்ல எனினும், அவற்றினை மாற்றிக்கொண்ட மக்களினம் உண்டா? என் மக்களோ, என்மாட்சியைப் பயனற்ற ஒன்றிற்காக மாற்றிக் கொண்டனர் வானங்களே இதைக்கண்டு திடுக்கிடுங்கள் அஞ்சி நடுங்கித் திகைத்து நில்லுங்கள், என்கிறார் ஆண்டவர்.ஏனெனில், என்மக்கள் இரண்டு தீச்செயல்கள் செய்தார்கள் பொங்கி வழிந்தோடும் நீரூற்றாகிய என்னைப் புறக்கணித்தார்கள் தண்ணீர் தேங்காத, உடைந்த குட்டைகளைக் தங்களுக்கென்று குடைந்து கொண்டார்கள்.

**பதில்பாடல் :** தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்.

### நற்செய்தி : மத்தேயு 13 : 10 – 17

அக்காலத்தில் சீடர்கள் இயேசுவைநோக்கி, "ஏன் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகின்றீர்?" என்றுகேட்டார்கள்.அதற்கு இயேசு அவர்களிடம் மறுமொழியாகக்கூறியது. "விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. அவர்களுக்கோ கொடுத்துவைக்கவில்லை.உள்ளவருக்குக் கொடுக்கப்படும் அவர் நிறைவாகப்பெறுவார். மாறாக, இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்.அவர்கள் கண்டும் காண்பதில்லை. கேட்டும் கேட்பதில்லை புரிந்து கொள்வதுமில்லை. இதனால்தான் நான் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகிறேன்.இவ்வாறு எசாயாவின் பின்வரும் இறைவாக்கு அவர்களிடம் நிறைவேறுகிறது "நீங்கள் உங்கள் காதால் தொடர்ந்துகேட்டும் கருத்தில்கொள்வதில்லை. உங்கள் கண்களால் பார்த்துக் கொண்டேயிருந்தும் உணர்வதில்லை.இம்மக்களின் நெஞ்சம் கொழுத்துப்போய்விட்ட.து. காதும் மந்தமாகிவிட்டது. இவர்கள் தம்கண்களை மூடிக்கொண்டார்கள் எனவே கண்ணால் காணாமலும், காதால் கேளாமலும், உள்ளத்தால் உணராமலும், மனம்மாறாமலும் இருக்கின்றார்கள். நானும் அவர்களைக் குணமாக்காமல் இருக்கிறேன்." உங்கள் கண்களோ பேறுபெற்றவை. ஏனெனில் அவைகாண்கின்றன. உங்கள் காதுகளும் பேறுபெற்றவை. ஏனெனில் அவை கேட்கின்றன.நான் உறுதியாக உங்களுக்குச்சொல்கிறேன் பல இறைவாக்கினர்களும் நேர்மையாளர்களும் நீங்கள் காண்பவற்றைக்காண ஆவல் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்கவிரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை"என்றார்.

**தியானம்:** விண்ணரசு ஒரு மறை பொருள் எனவே தான் அதை விளக்க பல உவமைகள் தேவைப்படுகின்றன. ஆயினும் இந்தமறை பொருள் ஞானிகளின், அறிஞர்களின் பார்வையில் மறைந்திருப்பினும் குழந்தை மனநிலை உள்ளவர்களுக்கு வெளிப்படுகிறது. இஸ்ரவேலரை இறைவன் எவ்வளவோ ஆசீர்வதித்திருந்த போதிலும் அவர்கள் இறைவனது ஆசீர்வாதத்திற்கு உரிய மக்களாக வாழவில்லை. அவர்கள் அந்நிய தெய்வங்களுக்கும், தேவதைகளுக்கும் சிலைகள் செய்து வழிபட்டுவந்தனர். இறைவனது வார்த்தைக்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை. எனினும் இஸ்ராயேலுக்கு கிடைக்காத பெரும்பாக்கியத்தை இறைவன் எமக்கு வழங்கிள்ளார். இறைவார்த்தையை படிக்கவும், வாசிக்கவும் பல சந்தர்ப்பங்களை நமக்கு வழங்கியுள்ளார். எனவே புதிய இஸ்ராயேலராகிய நாம் இறைவனது அன்பும், இரக்கமும் பல்வேறுவழிகளில் நமக்கு வந்ததை உணர்ந்து கொள்ள முடிகிறது. நம் கண்களும், காதுகளும், உள்ளமும் நற்செய்தி போதனைகளுக்கு திறந்திருக்கட்டும். எனவே நம் வாழ்வின் அன்றாட சூழ்நிலைகளில் தன்னை வெளிப்படுத்தும் கடவுளை அறிந்து கொள்ள முயற்சிப்போம்.